# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 29.05.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ் எவனுக்கும் அவனது தகுதிக்கு அப்பாற்பட்ட பொறுப்பை சுமத்துவதில்லை. அவன் சம்பாதித்த(நன்மையான)து அவனுக்கே. அவன் சம்பாதித்த(தீமையான)து அவனுக்கே. எங்கள் இறைவா! நாங்கள் மறந்து விட்டாலோ, தவறிழைத்தாலோ நீ எங்களை தண்டிக்காதிருப்பாயாக! எங்கள் இறைவா! எங்களுக்கு முன்னுள்ளவர்கள் மீது நீ பாரத்தை சுமத்தியது போன்று எங்கள் மீதும் நீ அதனை சுமத்தாதிருப்பாயாக! எங்கள் இறைவா! எங்களால் (சுமக்க) இயலாத(பாரத்)தை எங்கள் மீது சுமத்தாதிருப்பாயாக! எங்கள் (குற்றங்களை) மன்னிப்பாயாக! எங்கள் மீது கருணை காட்டுவாயாக! நீயே எங்கள் எஜமானன்; ஆகவே நிராகரிக்கும் கூட்டத்தினருக்கு எதிராக நீ எங்களுக்கு உதவி புரிவாயாக. (2:287)

அல்லாஹ் இந்த வசனத்தில் ஒரு உயிரின் மீதும் அதன் திறமைகள் மற்றும் அதன் சக்திக்கு அப்பாற்பட்ட சுமையை சுமத்துவதில்லை என்று வாக்குறுதி வழங்கியுள்ளான். வுஸ்அத் என்றால் பரந்த, மிக விசாலமான என்ற சொல் மனிதனுக்காக கூறப்படும் போது மனிதனுடைய குறுகிய சக்தி மற்றும் குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட திறன்களை மனதில் கொண்டு கூறப்படுகிறது. உதாரணமாக, இந்த வசனத்தில் **லா யுகல்லிஃபுல்லாஹு நஃப்ஸன் இல்லா வுஸ்அஹா** என்பதில் **வுஸ்அஹா** என்று அல்லாஹ் மனிதனுக்காக கூறுகிறான். ஆனால் நான் கடந்த குத்பாக்களில் ஏற்கனவே கூறியது போன்று இந்த சொல் அல்லாஹ்வுக்காக பயன்படுத்தப்படும் போது **வாஸிஃ** – மிகவும் விசாலமானவன்; அனைத்தையும் சூழ்ந்தவன் என்று கூறப்படுகிறது. இது இறைவனின் ஒரு பண்புப் பெயராகும். அவனது சக்திக்கும், வல்லமைக்கும் எந்த எல்லையும் இல்லை என்பது இதன் பொருளாகும். அல்லாஹ் எல்லா சிறந்த பண்புகளும் உடையவன் ஆவான். அவன் வல்லமையுள்ளவன் ஆவான். அதே சமயம் அவனுடைய வல்லமை, அறிவு மற்றும் ஞானத்திற்கு எல்லையே இல்லை. எனவே மனிதன் அவனுடைய அறிவை முழுமையாக அறிந்து கொள்வது என்ற பேச்சுக்கே இடமில்லை.

இந்த வசனம் தொடர்பாக நான் சில விஷயத்தை எடுத்துரைப்பேன். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களின் வெளிச்சத்திலும் சிலவற்றை எடுத்துரைக்கிறேன். அதாவது மனிதன் பல்வேறு நிலைகளில் தனது திறன்கள் மற்றும் சக்திகளின் விசாலத்தின் அடிப்படையில் பொறுப்பாளி ஆக்கப்பட்டிருக்கிறான்.

இறைவன் மனிதனால் நிறைவேற்ற முடியாத எந்த கட்டளையையும் இடுவதில்லை. மனிதனின் சக்திக்கு அப்பாற்பட்ட கட்டளைகள் எதுவும் இடுவதில்லை. அல்லாஹ்வின் கட்டளைகளின்படி செயலாற்ற முயற்சி செய்வது மனிதனின் பொறுப்பாகும். முயற்சி செய்தால் தான் அல்லாஹ் வாக்குறுதி அளித்துள்ள அருட்கொடைகளை ஒரு மூஃமின் பெற முடியும். மனிதனின் சக்திக்கு ஏற்ப கட்டளைகளை வழங்கி ஒவ்வொருவரையும் அவரவர் செய்த செயல்களின் அடிப்படையில் நற்கூலிக்கும் தண்டனைக்கும் பொறுப்பாளி ஆக்குகின்ற போதனை இஸ்லாத்தின் சிறப்பாகும். ஒரு பாவமும் செய்யாத ஒரு நபிக்கு (அதாவது ஈஸா (அலை) அவர்களுக்கு) சாபத்திற்குரிய மரணத்தை கொடுத்து, கியாமத் நாள் வரை பாவம் செய்தாலும், தவறிழைத்தாலும் இறைவணக்கத்தில் கவனமற்று இருந்தாலும் பரவாயில்லை என்ற பகுத்தறிவுக்கு மாற்றமான போதனையை வழங்கவில்லை. ஒரு நபி, அல்லாஹ்வின் அடியார் மனித குலத்தின் பாவத்திற்காக தானே ஒரு இழிவான, சாபத்திற்கு உரிய மரணத்தை ஏற்றுக் கொண்டார் என்று கூறவில்லை. மாறாக, திருக்குர்ஆனின் ஒவ்வொரு போதனையும் ஒவ்வொருவரின திறமை, சக்தி ஆகியவற்றை கருத்தில் கொண்டு அதற்கு ஏற்ப அமைந்துள்ளது.

மனிதன் நன்மை செய்வதும், நன்மை செய்வதற்கு முயற்சி செய்வதும் மனிதனை அனைத்து பாவங்களிலிருந்தும் முழுமையாக தூய்மையாக்கி விடுவதில்லை. மனிதனுடைய நாடி நரம்புகளில் இரத்தத்தைப் போன்று ஷய்த்தான் ஓடிக் கொண்டிருக்கிறான் என்று ஒரு ஹதீஸில் வருகிறது. எனவே, மனிதன் சில தவறுகளையும் பாவங்களையும் தன்னையும் அறியாமல் செய்வதற்கான சந்தர்ப்பங்கள் நேர்ந்து விடுகின்றன. பாவமன்னிப்பு வேண்டியவாறு அதிலிருந்து தப்பித்திருக்க முயற்சி செய்ய வேண்டும். அதோடு நன்மையின் பால் முன்னேற முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் கட்டளையிட்டுள்ள செயல்களை செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். தம்மில் தூய மாற்றத்தை ஏற்படுத்த கடுமையாக உழைக்க வேண்டும். அவ்வாறு செய்தால் மிகவும் கருணையாளனாகிய இறைவன், பாவங்களை மன்னிக்கின்ற இறைவன் தனது அடியானின் பாவங்களை மன்னித்தவாறு கருணையோடு அடியாரின் மீது கவனம் செலுத்துகிறான்.

திருக்குர்ஆன் நமக்கு வழங்கிய அழகிய போதனை இதுவேயாகும். இதற்கு யாரையும் பலிகொடுப்பதற்கான அவசியம் இல்லை. நான் ஏற்கனவே கூறியது போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் லா யுகல்லிஃபுல்லாஹு நஃப்ஸன் இல்லா வுஸ்அஹா என்பதற்கு என்ன பொருள்? இது எந்தெந்த விஷயத்திற்கெல்லாம் பொருந்தும்? மனிதன் தனது செயலுக்கு எந்தெந்த நேரம் பொறுப்பாளி அல்ல? எங்கெல்லாம் மனிதன் பொறுப்பாளி ஆகின்றான்? இதைப் பற்றி மிகவும் தெளிவாக நமக்கு விளக்குகின்றார்கள்.

அல்லாஹ் யாருக்கும் அவனுடைய அறிவுக்கு மிகுந்த கஷ்டத்தை வழங்குவதில்லை என்று கூறிய இறைவன், குல் ரப்பி ஸித்னீ இல்மா (20:115) - இறைவா! எனது அறிவை நீ வளரச் செய்வாயாக என்று நீர் கூறுவீராக என்ற துஆவையும் கற்றுக் கொடுக்கிறான். இந்த துஆ ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டதும் கியாமத் நாள் வரை எல்லாவற்றையும் சூழ்ந்துள்ள அறிவு அவர்களுக்கு வழங்கப்பட்டது. திருக்குர்ஆன் இறக்கப்பட்டுக் கொண்டிருந்த போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது என்னென்ன அறிவுப் பொக்கிஷங்கள் இறங்கவிருக்கிறது என்று அல்லாஹ் நன்கு அறிந்திருந்தான். அப்போது இறைவன் திருக்குர்ஆன் இறங்குகின்ற போது நீர் அவசரப்படாதீர் (75:17) என்று கூறினான். எப்போதும் எனது அறிவை வளப்படுத்துவாயாக என்று துஆ செய்து வாரும் என அல்லாஹ் கூறினான. இல்ம் மற்றும் இர்ஃபான் அடங்கிய பெரும் சமுத்திரத்தை அல்லாஹ் அவர்களுக்கு இதன் மூலம் இறக்கினான். அதில் இன்னும் அபிவிருத்தி ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. திருக்குர்ஆன் இறங்கிய பிறகும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்ட மக்களுக்கு இந்த துஆவும் தமது அறிவை பெருக்கிக் கொள்வதற்கும் எவ்வளவு அவசியம் ஏற்பட்டது! இதற்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது உம்மத்திற்கு நீங்கள் சீனா சென்றாவது கல்வியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று அறிவுரை வழங்கினார்கள். அதாவது அறிவை கல்வியைப் பெறுவதற்காக உழையுங்கள். உயிரோடு இருக்கும் வரை கல்வியைப் பெருக்கிக் கொள்ள முயற்சி செய்யுங்கள்.

அல்லாஹ் எந்த ஆன்மாவையும் துன்பப்படுத்துவதில்லை என்று கூறுகிறான். ஒரு மனிதரிடம் திறமையையும், சக்தியையும் உருவாக்காத வரை அல்லாஹ் அவரை பொறுப்பாளி ஆக்குவதும் இல்லை அவரிடம் கேள்வி கணக்கு கேட்பதும் இல்லை. ஒரு உண்மையான மூஃமின் அறிவைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். முடிந்த வரை தமது அறிவை பெருக்கிக் கொள்ள துஆவும் செய்ய வேண்டும்.

ஒரு வகையான இல்ம் -ஐ இறைவன் தனது நபிமார்களுக்கு வழங்குகின்றான். எல்லாரையும் விட மிக அதிகமாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் இந்த அறிவை வழங்கினான். அதோடு ரப்பி ஸித்னி இல்மா (20:115) என்ற துஆவையும் கற்றுக் கொடுத்தான். இரண்டாவது வகையான அறிவு ஆன்மீகம், பௌதீகம் ஆகிய இரண்டும் ஆகும். இதற்காக உழைப்பதோடு துஆவும் செய்து வர வேண்டும். இது ஒரு மூஃமினின் பணியாகும். அறிவைப் பெறுவதற்கு உழைப்பு தேவை இல்லை என்றால் பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கஷ்டத்தையெல்லாம் பொறுத்துக் கொண்டாவது கல்வியை, அறிவைக் கற்றுக் கொள்ளுங்கள் என்று கூறியது அர்த்தமற்றதாகி விடும். ஆனால் கல்வியைப் பெறுவதற்கும்

அல்லாஹ்வின் அருள் இல்லாமல் திறமைகள் உருவாவதில்லை. எனவே நீங்கள் உங்களை மட்டுமே நம்பாதீர்கள் என்று கூறி கல்வியையும் அறிவையும் பெறுவதற்கு துஆவின் மூலம் இறைவனிடம் உதவி தேடுங்கள். ஒவ்வொருவரும் தத்தமது தகுதிக்கும் திறனுக்கும் ஏற்றாற்போல் கல்வியைக் கற்றால் உங்களுக்கு வளம் கிடைக்கும்.

ஒவ்வொருவருக்கும் அல்லாஹ் பல்வேறு திறமைகளை வைத்துள்ளான். குழந்தைப் பருவத்தின் தர்பிய்யத் வாழ்க்கை முறை, சுற்றுப்புறம் ஆகியவையின் தாக்கம் மனிதனுக்கு ஏற்படுகிறது. எனவே அல்லாஹ் இதற்கும் பல படித்தரங்களை ஏற்படுத்தி இருக்கிறான். ஒவ்வொருவரும் தத்தமது தகுதிக்கு ஏற்ப கல்வியை, அறிவைப் பெற வேண்டும். அதற்காக முயற்சி செய்ய வேண்டும். அப்போது தான் உங்கள் மத்தியில் வளம் ஏற்படும். இதற்காக அல்லாஹ் படித்தரங்களை ஏற்படுத்தியுள்ளான். மிக உயர்ந்த அறிவும் கல்வியும் படைத்த திறமையானவர் மற்றும் மார்க்கம், பௌதீகம் ஆகிய கல்வியைப் பெறுவதற்கு எல்லா வாய்ப்பையும் பெற்று திறமையாக விளங்குகின்ற ஒருவரை அல்லாஹ் பொறுப்பாளி ஆக்குவதைப் போன்று குறைந்த அறிவு படைத்த அல்லது சுற்றுச்சூழலின் காரணமாக அல்லது இயற்கையாகவே குறைவான மதி உடைய ஒருவரை பொறுப்பாளி ஆக்குவதில்லை. அல்லாஹ்வின் அறிவு எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளது. இதன் காரணமாக அவன் எல்லா நிலைகளையும் நன்கு அறிகின்றான் என்பது வெளிப்படை. எனவே அவன் ஒருவனை பொறுப்பாளி ஆக்குகிறான் என்றால் அந்த மனிதனுடைய நிலையை நன்கு அறிந்துதான் அவனை பொறுப்பாளி ஆக்குகிறான்.

மனிதனுக்கு இறைவன் வழங்கியுள்ள திறமைகளை அல்லாஹ் கட்டளையிட்டுள்ள அறிவைப் பெறுவதற்காக பயன்படுத்தவில்லை என்றால் அவ்வாறான மனிதர் கட்டாயம் பதில் சொல்லி ஆக வேண்டும். இவ்விடத்தில் லா யுகல்லிஃபுல்லாஹு நஃப்ஸன் என்ற வசனத்திற்கு நீங்கள் உங்கள் நஃப்ஸை பயன்படுத்த வேண்டிய அளவிற்கு பயன்படுத்தவில்லை என்று பொருள். முஸ்லிம் என்று அழைக்கப்படுகின்ற ஒருவர் முக்கியமான மார்க்க அறிவை அதிகம் வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்காக முயற்சி செய்ய வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

சத்தியத்தை தேடுபவர் ஒரு நிலையை அடைந்தவுடன் ஒருபோதும் நின்றுவிடக் கூடாது. அவ்வாறு நின்று விட்டால் சாபத்திற்குரிய **ஷய்த்தான்** வேறு பக்கம் கவனத்தை மாற்றி விடுவான். தேங்கிக் கிடக்கின்ற தண்ணீரில் துர்நாற்றம் ஏற்படுவதைப் போன்று ஒரு மூஃமின் தனது முன்னேற்றத்திற்காக முயற்சி செய்யாவிட்டால் பின்தங்கி விடுகிறார். எனவே உண்மையாக தனது அறிவைப் பெருக்கிக் கொள்வதற்கு இரவு பகலாக உழைக்க வேண்டும். நமது நபி கரீம் (ஸல்) அவர்களை விட முழுமையான மனிதர் இவ்வுலகில் வேறு யாரும் இல்லை. ஆனால் அவர்களுக்கும் ரப்பி ஸித்னீ இல்மா (20:115) என்று துஆ கற்றுக் கொடுக்கப்பட்டது என்றால் தனது அறிவு மற்றும் ஞானத்தின் மீது முழுமையான நம்பிக்கை வைத்து ஓரிடத்தில் நின்று வருங்கால முன்னேற்றங்கள் தேவை இல்லை என்று யாரால் கூற முடியும்? எனவே இங்கு **லா யுகல்லிஃபுல்லாஹு நஃப்ஸன் இல்லா வுஸ்அஹா** -ன் பொருள் நீங்கள் எல்லா திறமைகளையும் பயன்படுத்தி அறிவைப் பெற முயற்சி செய்யுங்கள். அவ்வாறு நீங்கள் முயற்சி செய்து கொண்டிருந்தால் இறைவனுடைய விருப்பத்தைப் பெற்றுக் கொண்டே இருப்பீர்கள். ஏனென்றால் இறைவன் அடையாளம் காட்டுகின்ற அறிவைக் கொண்டு அல்லாஹ்வைப் பற்றிய ஞானம் பெருகுகிறது. இந்த ஞானத்தின் காரணமாக மனிதன் அல்லாஹ்வின் முன் குனிபவன் ஆகின்றான். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்.

(உண்மை நிலை என்னவென்றால்) அல்லாஹ்வின் அடியார்களுள் அறிவுடையோர் மட்டுமே அவனுக்கு அஞ்சுகின்றனர். (35:29)

அறிவில் முன்னேறுவது உள்ளத்தில் அச்சத்தை ஏற்படுத்துகிறது. இவ்விடத்தில் பெயர் தாங்கிய ஆலிம்களை அல்லாஹ் கூறவில்லை. இவர்கள் மார்க்க அறிவைக் கற்றுக் கொண்டு தமது அறிவாற்றலால் பிறரின் மீது ஆதிகம் செலுத்த முயற்சி செய்கிறார்கள். மாறாக எப்போதெல்லாம் அல்லாஹ்வின் அருளால் தமது அறிவில் அபிவிருத்தி ஏற்படுவதை காண்கிறார்களோ அப்போதெல்லாம் அவர்கள் பெற்றுக் கொண்ட

அறிவை வைத்து அல்லாஹ்வை அடையாளம் கண்டுகொள்ள முயற்சி செய்கிறார்கள். எங்கு பார்த்தாலும் உனது காட்சியே எனக்கு தென்படுகிறது என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியதன் உண்மையான பொருள் மனிதனுக்கு புரிகிறது. அப்போதுதான் அறிவின் அடிப்படையில் லா யுகல்லிஃபுல்லாஹூ நஃப்ஸன் இல்லா வுஸ்அஹா என்பதன் சரியான, உண்மையான பொருள் என்ன என்பது புரிகிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கூற்றிலிருந்தும் விளக்கத்திலிருந்தும் இந்த வசனத்திற்கு நான் எடுத்த இரண்டாவது பொருள், **லா யுகல்லிஃபுல்லாஹூ நஃப்ஸன் இல்லா வுஸ்அஹா** என்று கூறி அல்லாஹ் மனிதனுடைய புரிந்து கொள்கின்ற சக்திக்கு உட்பட்ட நம்பிக்கையை தான் எடுத்துரைக்கிறான் என்பதை விளக்குகிறான். இறை கட்டளையின் மூலம் மனிதன் துன்பத்திற்கு ஆளாகிவிடக் கூடாது. இவ்வசனத்திற்கு முந்தைய வசனத்தில் அல்லாஹ் முஃமின்களைப் பற்றி அவர்களது ஈமானின் நிலையைப் பற்றி கூறுகிறான்.

(முஃமின்களாகிய) அவர்கள் அல்லாஹ், அவனது வானவர்கள், அவனது வேதங்கள் மற்றும் அவனது ரஸூல்மார்கள் ஆகியவற்றின் மீது நம்பிக்கை கொள்கின்றனர். (2:286) இன்னோரிடத்தில் அவர்கள் கியாமத் நாளின் மீதும் நம்பிக்கை கொள்கின்றனர் என்று அல்லாஹ் கூறுகிறான்.

இது தொடர்பாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்ற ஒரு ஹதீஸும் உள்ளது. அதாவது நாங்கள் ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் அமர்ந்திருந்தோம். அப்போது வெண்ணிற ஆடை அணிந்த ஒருவர் வந்தார். அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய முட்டோடு தனது முட்டை ஒட்டி வைத்தவாறு அமர்ந்து கொண்டார். பிறகு முஹம்மத் (ஸல்) அவர்களே! ஈமான் என்றால் என்ன? என்று கேள்வி கேட்டார். அதற்கு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள், நீர் அல்லாஹ்வின் மீதும், அவனது மலக்குகள் மீதும், அவனது வேதங்களின் மீதும் அல்லது ரஸூல்மார்கள் மீதும் ஈமான் கொள்ள வேண்டும். கியாமத் நாளை நம்ப வேண்டும். நன்மை தீமை ஆகிய விதியை நம்ப வேண்டும். இதுவே நம்பிக்கை ஆகும் என்று கூறினார்கள்.

ஆக இங்கு கூறப்பட்டது எதுவுமே மனிதனால் புரிந்து கொள்ள முடியாதது எதுவுமே இல்லை. நல்ல இயல்பு கொண்டு அல்லாஹ்வின் தேட்டம் இருந்தால், இந்த பிரபஞ்சம் அல்லது இந்த பூமியில் எண்ணற்ற இறை படைப்பினங்கள் இருக்கின்றன. அவைகளைப் பற்றி சிந்தித்தால் இறைவனின் மீது நமக்கு நம்பிக்கை ஏற்பட்டு விடும். இறைவனின் படைப்பினங்களையும் இயற்கையையும் பார்த்து, இறைவன் காட்டிய வழியில் நடந்தவாறு இறைவனின் மலக்குகளின் மீது மனிதன் சிந்திக்கின்றான். இயற்சை சட்டங்களையும் படைப்பினங்களையும் மனிதன் சிந்திக்கின்றான். அவ்வாறு சிந்திக்கின்ற போது மனிதனுக்கு தத்தமது அறிவுத் திறனுக்கு ஏற்ப இறைவனின் மலக்குகளின் மீது நம்பிக்கை ஏற்படுகிறது.

பிறகு இறைவனின் நபிமார்களின் மீது வேத நூல்கள் இறங்கியுள்ளன. நம் அனைவரும் அறிந்தது போன்று, அந்த எல்லா வேதங்களையும் திருக்குர்ஆன் மெய்ப்பிக்கின்றது. அதில் காணப்படுகின்ற தவறுகளையும் குறைகளையும் அடையாளம் காட்டுவதோடு அதில் செய்யப்பட்டுள்ள மாற்றங்களையும் திருக்குர்ஆன் எடுத்துரைக்கிறது. சில போதனைகளை உண்மைப்படுத்தி சில போதனைகளை ரத்து செய்து விட்டது. திருக்குர்ஆனின் உண்மைத்துவத்திற்கு அது பல ஆதாரங்களை முன்வைக்கிறது. இன்று வரை திருக்குர்ஆனில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. இனியும் செய்யப்பட முடியாது. இதன் மீது உறுதியான ஈமான் ஏற்படுகிறது என்றும் இது பிரகடனம் செய்கிறது. திருக்குர்ஆன் கொடுக்கின்ற போதனையைப் பற்றி, அது மனித அறிவுக்கும் திறனுக்கும் அப்பாற்பட்டது என்று கூற முடியாது. ஏனென்றால் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்திலிருந்து இன்று வரை கோடிக்கணக்கான முஸ்லிம்கள் இதன்படி செயல்பட்டு நமக்கு காட்டி இருக்கிறார்கள்.

பிறகு இறைவனின் ரஸூல்மார்கள் மீதும் ஈமான் கொள்ள வேண்டும். ரஸூல்மார்களை நிராகரிப்பது அந்த சமுதாயத்தின் பேரிழப்பாகும். ஆனால் அவர்களின் போதனைகளும் அவர்களின் வாதங்களும் எந்த மனிதனையும் கஷ்டப்படுத்துகின்ற அளவுக்கு அமைந்ததே இல்லை. இறைவன் புறமிருந்து வந்த எல்லா நபிமார்களும் நான் உங்களை இறைவனோடு சேர்ப்பதற்காகவும் உங்கள் நலனுக்கான போதனைகளை

உங்களுக்கு வழங்கவே வந்துள்ளோம் என்று தான் கூறியுள்ளனர். இவ்வாறு செய்வதற்கு நான் உங்களிடம் எந்த கூலியையும் வேண்டவில்லை. எனது கூலிகள் இறைவனிடம் உள்ளது. உங்களுக்கு துன்பத்தை தர வேண்டும் என்பது எனது நோக்கம் இல்லை. மாறாக உங்களுக்கு நலன் சேர்ப்பதே எனது நோக்கமாகும். எனவே நீங்கள் இறுதிநாளின் மீது நம்பிக்கை வையுங்கள். நற்கூலி மற்றும் தண்டனை ஆகிய விதியின் மீது நம்பிக்கை கொண்டவாறு நற்பணிகள் செய்து இறைவனிடம் நற்கூலியைப் பெறுங்கள். அவனது விருப்பத்திற்குரிய சொர்க்கத்தில் நுழையுங்கள்.

நல்ல செயல்களுக்கு இறைவன் வழங்குகின்ற நற்கூலி எவ்வளவு மிகுந்தது? இது தொடர்பாக இறைவன் எந்தவொரு தீமைக்கும் உரிய தண்டனை அந்த தீமையின் அளவு மட்டுமே ஆகும். ஆனால் நம்பிக்கைக்குரிய நற்கூலி 10 மடங்கு அல்லது இதை விட பன்மடங்கு அதிகமாக வழங்குவேன் என்று கூறுகிறான்.

தனது நபிமார்களின் மூலம் அல்லாஹ் உலகிற்கு வழங்குகின்ற போதனைகள் யாவும் மனிதனின் சக்திக்கு உட்பட்டதே ஆகும். முந்தைய சமுதாயத்தில் மக்களுடைய அறிவுத் திறன் குறைவாக இருந்தது. எனவே அவர்களுக்கு அதற்கு தகுந்தவாறே போதனையும் வழங்கப்பட்டிருந்தது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மஜ்லிஸில் ஈமானைப் பற்றி கேள்வி கேட்க வந்த ஜிப்ரீல் (அலை) அவர்கள் இஸ்லாத்தின் கடமையைப் பற்றியும் கேட்டார்கள். இஸ்லாம் என்றால் என்ன? என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கேட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கலிமா தய்யிபா லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (என்று கூறுவது இஸ்லாம் ஆகும்) என்று பதிலளித்தார்கள். பிறகு தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ் இவ்வனைத்தும் இஸ்லாத்தின் கடமையாகும் என்று கூறினார்கள்.

தொழுகை, நோன்பு ஆகிய இறை வணக்கங்களுக்காகவும் அல்லாஹ் யாரையும் பொறுப்பாளி ஆக்கவில்லை. ஒருவர் நோய்வாய்ப்பட்டிருந்தால் அவரால் நின்று தொழ முடியாதென்றால் உட்கார்ந்து கொண்டே அல்லது படுத்துக் கொண்டே தொழ அனுமதி உண்டு. பயணத்தில் இருந்தால் ஜம்அ – சேர்த்து தொழுவதற்கும் கஸர் தொழுவதற்கும் அனுமதி உண்டு. அவ்வாறே பயணத்தில் நோன்பு நோற்க வேண்டாம். நோயின் போது நோன்பு வைக்காமல் இருப்பதற்கு அனுமதி உண்டு. ஸக்காத் – கணக்கு யாருக்கு முழுமையடைகின்றதோ அவருக்குத்தான் கடமையாகும். ஹஜ் பயணம் மேற்கொள்வதற்கு வசதியுடையவரின் பாதை பாதுகாப்பாக இருக்க வேண்டும். ஆரோக்கியமும் இருக்க வேண்டும். அப்போதுதான் ஹஜ் கடமையாகிறது.

ஆக அல்லாஹ் கூறியுள்ள எல்லா கட்டளைகளும் மனிதனுடைய சக்திக்குட்பட்டதாகவே இருக்கிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது காலத்திலிருந்து இன்று வரை எல்லா இன மக்களும் இந்த கட்டளையை செய்து காட்டியுள்ளார்கள். இந்த போதனைகளின்படி அமல் செய்யாத, முஸ்லிம் என்று தங்களை கூறிக்கொள்கிற மக்களை நான் குறிப்பிடவில்லை. மாறாக கோடிக்கணக்கான முஸ்லிம்கள் இதன்படி செயல்படுகின்றனர். செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய மூன்றாவது விஷயம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் செயல் உங்களுக்கு சிறந்த முன்மாதிரி ஆகும். அல்லாஹ் கூறுகிறான்:

உங்களுக்கு அல்லாஹ்வின் தூதரிடத்து மிக மேலான முன்மாதிரி உண்டு (33:22)

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எல்லா கட்டளைகளிலும், ஒழுக்கத்திலும், இறைவணக்கத்திலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்ற வேண்டும் என்பது நமக்கு வழங்கப்பட்ட கட்டளையாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் எல்லா சிறப்புகளையும் நிழல் ரீதியாகப் பெறுகின்ற திறன் நமது இயல்பிற்கு வழங்கப்படவில்லை என்றால் இந்த திருத்தூதரைப் பின்பற்றுங்கள் என்று ஒருபோதும் கட்டளை

இறங்கியிருக்காது. ஏனென்றால் இறைவன் நமது சக்திக்கு அப்பாற்பட்ட கட்டளையை ஒருபோதும் இறக்கமாட்டான். இறைவன் லா யுகல்லிஃபுல்லாஹு நஃப்ஸன் இல்லா வுஸ்அஹா என்று கூறி, நீங்கள் இந்த நபியைப் பின்பற்றுங்கள் என்று கட்டளை இடுகின்றான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நிழல்ரீதியாக என்ற சொல்லின் மூலம் இக்கருத்தை விளக்கியுள்ளார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சிறப்புகளை நீங்கள் பெற முடியாது. ஆனால் தத்தமது திறமைக்கு ஏற்றவாறு அதன் மீது செயல்பட்டு இந்த சிறப்பை நிழல் ரீதியாக பெற முடியும். இதற்காக முயற்சி செய்யுங்கள். இது ஒவ்வொரு மூஃமினுக்கும் கடமையாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நிலைநாட்டியுள்ள முன்மாதிரியை செயல்படுத்த அல்லாஹ் நமக்கு திறமையை வழங்கியுள்ளான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பெற்ற சிறப்புகளை நம்மால் அடைய முடியாது. எனவே முயற்சி செய்வதும் தேவை இல்லை என்று கூறுவது அல்லாஹ் நம்மீது சுமத்தியுள்ள கடமையிலிருந்து நம்மை விடுவித்து விடாது. நான் ஏற்கனவே கூறியது போன்று இந்த உம்மத்தில் கோடிக்கணக்கான மக்கள் இதை செய்து காட்டியுள்ளார்கள். ஒரு சாதாரண மூஃமின் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நிலைநாட்டியுள்ள முன்மாதிரியை தமது தகுதியால் திறமையால் கடைபிடிக்க முடியும்.

இது தொடர்பான நான்காவது விஷயம், அல்லாஹ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை எல்லா மனித இனத்திற்காகவும் அனுப்பினான். அவர்கள் கொண்டு வந்த போதனையை ஏற்றுக் கொள்வது எல்லாருக்கும் கடமையாகும். நான் ஏற்கனவே கூறியது போன்று அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்களின் மீது ஈமான் கொள்வதுதான் ஈடேற்றத்திற்கான ஒரே வழியாகும். ஆனால் அல்லாஹ் யாருக்கும் அவனது சக்திக்கு அப்பாற்பட்ட விஷயத்திற்கு பொறுப்பாளி ஆக்குவதில்லை. எனவே சான்றுகள் முழுமையடையாத ஒரு மனிதரை அல்லாஹ் பொறுப்பாளி ஆக்குவதில்லை.

**இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

இறைவனின் பார்வையில் சான்றுகள் முழுமையடைந்த ஒருவர் கியாமத் நாளன்று கேள்வி கணக்கிற்கு தகுதி உடையவர் ஆவார். ஆனால் இறைவனின் பார்வையில் சான்றுகள் முழுமையடையாத ஒருவர் பொய்ப்படுத்தினாலும், மறுத்தாலும் வெளிப்படையான ஷரீஅத்தின் வழியில் அவருக்கு காஃபிர் என்று பெயர் சூட்டப்படுகிறது. நாமும் ஷரீஅத்தைப் பின்பற்றுவதால் அவரை காஃபிர் என்றுதான் அழைக்கிறோம். எனினும் **லா யுகல்லிஃபுல்லாஹு நஃப்ஸன் இல்லா வுஸ்அஹா** என்ற வசனத்தின் அடிப்படையில் கேள்வி கணக்கிற்கு ஆளாக மாட்டார் என்றாலும் அவர் ஈடேற்றம் பெற்று விடுவார் என்று நாம் தீர்மானித்து விடவும் முடியாது. அவருடைய பிரச்சனை இறைவனிடம் உள்ளது. நாம் அதில் தலையிட முடியாது. இங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதற்கான அறிவு இறைவனிடமே உள்ளது என்று கூறுகிறார்கள். இதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இறைவனின் பார்வையில் அறிவு சார்ந்த ஆதாரங்களும், வேதம் சார்ந்த ஆதாரங்களும், உயர் தரமான போதனை மற்றும் இறை அடையாளங்கள் எல்லாம் வெளிப்பட்ட பிறகும் யார் மீது சான்றுகள் பூர்த்தி ஆகவில்லை என்பதை இறைவனே நன்கு அறிவான். நமக்கு யாருடைய அந்தரங்கமும் தெரியாது. எல்லா வகையான சான்றுகளையும், இறை அடையாளங்களையும் வெளிப்படுத்தி தமது சான்றை மக்கள் மீது பூர்த்தியாக்க வேண்டும் என்பது தான் நபிமார்களின் நோக்கமாகும். இதற்காக இறைவனும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து வருகிறான். எனவே என் மீது இன்னும் சான்றுகள் முழுமையடையவில்லை என்று ஒரு மனிதர் தன்னைப் பற்றி வாதிட்டால் அவருடைய நிராகரிப்புக்கு அவரே பொறுப்பாளி ஆவார். அவர் செல்கின்ற வாதத்தின் விளைவு அவருடைய கழுத்திலேயே விழுகிறது. அறிவு சார்ந்த ஆதாரங்களும், வேத அடிப்படையிலான ஆதாரங்களும், உயர்தர போதனை மற்றும் இறை அடையாளங்கள் இன்னும் எல்லா வகையான வழிகாட்டலும் வெளிப்பட்ட பிறகும் ஏன் அவர் மீது சான்றுகள் முழுமையடையவில்லை? என்ற கேள்விக்கு அவரே பொறுப்பாளி ஆவார்.

எனவே சான்றுகள் முழுமை ஆகாமல் இறைவன் யாரையும் பொறுப்பாளி ஆக்கவில்லை. ஆனால் இஸ்லாத்தை எதிர்க்கின்றவர்களும் அஹ்மதிய்யத்தின் எதிரிகளும், அவர்களின் நஃப்ஸ் இன்னும் நம்மீது சான்றுகள் முழுமை அடையவில்லை என்று கூற கட்டாயப்படுத்துகிறதா? என்று யோசிக்க வேண்டும். இன்று

உலகில் இப்போது எங்கும் குழப்பமும் அழிவும் ஏற்படுகிறது. இது இறைவன் புறமிருந்து சான்றுகளை முழுமைப்படுத்துவதற்காகவே காணப்படுகிறதா (என்று யோசிக்க வேண்டும்). இந்த காலகட்டத்தில் இமாம் என்று ஒருவர் தம்மை வாதிக்கவும் செய்கிறார்.

இது தொடர்பாக விளக்கத்தின் ஐந்தாவது விஷயம், அல்லாஹ் பகுத்தறிவுக்கு புறம்பான விஷயத்தை ஏற்றுக் கொள்ளுமாறு யாரையும் வற்புறுத்துவதில்லை. இந்த விஷயங்களை எல்லாம் நீங்கள் ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறி யாரையும் அவன் இதற்கு பொறுப்பாளி ஆக்குவதில்லை.

திருக்குர்ஆனில் எண்ணற்ற இடத்தில் **ஹகீம்** – அதாவது இறைவன் நுட்பமான ஞானமுடையவன் என்ற சொல் வந்துள்ளது. அவன் இறக்குகின்ற கட்டளைகள் யாவும் ஞானம் மிகுந்தவையே ஆகும். அந்த ஞானத்தோடு தான் அதை இறக்குகிறான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை இறைவன் அனுப்பி அவர்களிடம் ஒப்படைத்த சிறப்புப் பணிகளுள் ஞானத்தைப் போதிப்பதும் ஒரு பணியாகும். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு வருங்காலத்தில் தோன்றவிருந்த ஒரு நபியைப் பற்றி துஆ கற்றுக் கொடுக்கப்பட்டது. அந்த துஆவில் இந்த விஷயத்தின் பக்கம் அதிக கவனம் செலுத்தப்பட்டிருக்கின்றது. ஹிக்மத் என்றால் நீதி மற்றும் நேர்மையைப் பரப்புவதே ஆகும். ஹிக்மத் என்றால் போதனையை முழுமையாக்குவது என்பதாகும். ஹிக்மத் என்றால் ஒவ்வொரு விஷயத்திற்கும் சான்று வழங்குவதாகும். அதாவது ஒரு கட்டளையிட்டால் அதை செய்வதற்கும் செய்யாமல் இருப்பதற்கும் காரணங்களை கூற வேண்டும். இதுவே அறிவின் எதிர்பார்ப்பு ஆகும்.

உதாரணமாக, இறைவன் மது அருந்துவதையும் சூதாட்டத்தையும் தடை செய்கிற கட்டளையை இறக்கியதோடு அல்லாஹ் கூறுகிறான்:

அவர்கள் உம்மிடம் மதுவைப் பற்றியும் சூதாட்டத்தைப் பற்றியும் விளவுகின்றனர். இவ்விரண்டிலும் மக்களுக்குப் பெரும் பாவமும் சில பயன்களும் உள்ளன. இவற்றின் பாவம் இவற்றிலுள்ள பயனை விட மிகவும் பெரிதாகும் என்று நீர் கூறுவீராக. (2:220)

மது அருந்துவதால் அது மனிதனை போதைக்கு ஆளாக்கி இறை வணக்கத்திலிருந்து தடுக்கின்ற அதே சமயத்தில் அது சமூக அமைதியையும் கெடுத்து விடுகிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். எனவே மது அருந்துவது தடை செய்யப்பட்டுள்ளது. மது அருந்தும் ஒருவர் ஒரு குவளை மதுவை குடித்ததும் அவருடைய மூளையின் ஆயிரக்கணக்கான நரம்புகள் பாதிக்கப்படுகின்றன. எனவே மது அருந்துவதை இந்த சான்றுகளைக் காட்டி தடைசெய்யப்பட்டுள்ளது. சூதாடுபவர்களின் நிலையும் இதுவே ஆகும். சூதாடுகின்ற ஒருவர் இறைவணக்கத்தையும் மறந்து விடும் அளவுக்கு அதற்கு அடிமையாகி விடுகிறார். அவருக்கு வேறு உணர்வு இருப்பதில்லை. தவறான முறையில் பைசாவை சம்பாதிக்க முயற்சி செய்கிறார்; நேரத்தை வீணாக்குகிறார்; வீட்டுப் பொருட்களை விட்டு விலகி விடுகிறார். அறிவைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக மது அருந்துபவர்கள் எழுச்சியும் கோபமும் உடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அதே மதுவை மிகவும் குறைவான அளவில் மனித பயனுக்காக மருந்துகளில் பயன்படுத்தினால், மனித உயிரை காப்பாற்றுவதற்காக பயன்படுத்தினால் இது பயனுள்ளதாகும். ஹோமியோபதி மருந்துகளிலும், பிற மருந்துகளிலும் இது பயன்படுகிறது. இதில் மிகவும் குறைவான அளவு பயன்படுகிறது. இதனால் போதை வருவதில்லை. ஆனால் சுத்தமான சாராயத்தை குறைவாக குடித்தாலும் குடிப்பவர் தமக்கே தீங்கிழைத்துக் கொள்கிறார். பிறகு இந்தப் பழக்கம் மெல்ல மெல்ல வளர்கிறது. இதனால் குறைவாக குடிக்கின்ற பழக்கம் அதிகமாகிக் கொண்டே செல்கிறது. எனவே குறைவாக குடிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேப் போன்று இஸ்லாத்தில் நோன்பு வைக்க கட்டளை இருக்கிறது என்றால் இதனுடைய ஹிக்மத்தும் அதோடு சேர்த்து கூறப்பட்டுள்ளது. தொழுகை, நோன்பு போன்ற இறை கட்டளைகள் எல்லாமே மனிதனின் பயனுக்காகவே ஆகும். இறைவன் தடுத்துள்ளவைகளும், செய்ய வேண்டும் என்று கட்டளையிட்டுள்ள விஷயங்களும் மனிதனுடைய பயனுக்காகவே ஆகும். மனிதன் நிலைத்திருப்பதற்கு இவை மிகவும் அவசியமாகும். ஆக அல்லாஹ்வின் ஒவ்வொரு கட்டளையிலும் ஞானம் உள்ளது. ஞானத்தை விளக்காமல் இறைவன் யாருக்கும் இதை செய்; இதை செய்யாதே என்று கட்டளையிடுவதில்லை.

இதில் ஆறாவது விஷயம், அல்லாஹ் மனித சக்தியால் தாங்க முடியாத, சக்திக்கு அப்பாற்பட்ட ஷரீஅத்தின் சுமையை யார் மீதும் சுமத்துவதில்லை. (சுயமாக) செத்ததையும், இரத்தத்தையும், பன்றி இறைச்சியையும், அல்லாஹ் அல்லாத வேறு பெயர் கூறப்பட்டதையும் அவன் உங்களுக்கு விலக்கியுள்ளான். ஆனால் சட்டத்தை முறிக்காமலும், எல்லைகளை மீறாமலும் இருக்கும் நிலையில் (அவற்றை உண்ணும்) கட்டாயத்திற்கு உள்ளாகுபவர்களுக்கு எந்தப் பாவமும் இல்லை. நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனும் ஆவான். (2:174)

இந்த வசனத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள கட்டளை அறிவுக்கு ஏற்புடையதாக இருக்கிறது. ஞானம் பொதிந்ததாக இருக்கிறது. மனித சக்தி தாங்கிக் கொள்வதைப் பொருத்தவரையில் இந்த கட்டளை மிகவும் உயர்தரமான கட்டளையாக உள்ளது. உங்கள் உயிருக்கு ஆபத்து நேரும் போது இந்த ஹராமான பொருட்களைப் பயன்படுத்தலாம். ஆனால் உங்கள் உடலை மரணத்திலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்காகத்தான், உயிரோடு இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் பயன்படுத்த வேண்டும். தீயவற்றை உண்ணுவதிலிருந்து எப்போதுமே விலகி இருங்கள். உங்களால் முடிந்தவரை ஹலால், ஹராம் என்ற வேறுபாட்டை நிலைநாட்டுங்கள்.

இது தொடர்பான ஏழாவது விஷயம், அல்லாஹ்வின் கட்டளைகள் யாவும் மனித சக்திக்கு உட்பட்டதே ஆகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

இந்த வசனத்திலிருந்து அல்லாஹ்வின் கட்டளைகளைப் பேணுவது யாராலும் முடியாதது ஒன்றும் அல்ல. இறைவன் தனது பெருமையை, மொழிவளம், தான் கண்டுபிடித்த சட்ட வலிமை ஆகியவற்றின் பெருமையை மக்கள் மத்தியில் வெளிப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடும், அவன் ஷரீஅத்தை இறக்கவில்லை. அதாவது தனது திறமையையும் வலிமையையும் வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காக யாருக்குமே புரியாத விடுகதையை போட்டுவிட்டு, பார்த்தீர்களா? நான் கூறுவதை யாராலும் புரிய முடியவில்லை? என்று பெருமையடிப்பதற்காக ஷரீஅத்தை அவன் இறக்கவில்லை. பலவீனமான எனது அடியான் நான் பிறப்பிக்கின்ற கஷ்டமான கட்டளைகளை எவ்வாறு நிறைவேற்றுகிறான் என்று பார்த்து விடுகிறேன் எனக் கூறி பெருமையடிப்பதிலிருந்து இறைவன் தூய்மையானவன். அவன் இவ்வாறான வீணான காரியங்களை செய்வதில்லை.

இது தொடர்பான எட்டாவது வி–யம், இறை கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு இறைவன் விதித்துள்ள நிபந்தனைகள் எல்லாருடைய அறிவுத்திறன், கல்வித்திறன், சுற்றுச்சூழல், ஆன்மீகம் மற்றும் பௌதீகத் திறன் ஆகியவற்றை கருத்தில் கொண்டு அமைந்திருக்கின்றது. ஒவ்வொருவரும் தத்தமது கல்வித்திறன், அறிவுத்திறன், உடல் திறன், ஆன்மீகத் திறன், பௌதீகத் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் இறை கட்டளைகளின்படி செயல்பட பணிக்கப்பட்டுள்ளனர். அதன் அடிப்படையில் ஒவ்வொருவரும் பொறுப்பாளி ஆவார்கள். ஆனால் இறைவன் விதித்துள்ள கடமைகளை தத்தமது திறமைக்கு ஏற்ப நிறைவேற்றுவது மூஃமின்களின் மீது எல்லா நிலையிலும் கடமையாகும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ஒரு கிராமவாசி வந்து இஸ்லாத்தைப் பற்றி கேள்வி கேட்டார். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு நாளில் ஐந்து வேளை தொழுகை கடமையாகும் என்று கூறினார்கள். அவர் இதைத் தவிரவும் வேறு கடமையான தொழுகைகள் உண்டா? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வேறு கடமையான தொழுகைகள் இல்லை. ஆனால் நஃபில் தொழ விரும்பினால் தொழுது கொள்ளுங்கள் என்றார்கள். பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு மாதம் ரமலானின் நோன்பு நோற்க வேண்டும் என்று கூறினார்கள். அதற்கு அவர் இதைத் தவிர வேறு கடமையான நோன்பு உண்டா? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இல்லை. ஆனால் நஃபில் நோன்பு நீ விரும்பினால் நோற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். இவ்வாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸக்காத்து தொடர்பாகவும் கூறினார்கள். அதற்கு அந்த மனிதர் இது தவிரவும் என் மீது கடமையான ஸக்காத்து ஏதும் உண்டா? என்று கேட்டார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இல்லை; ஆனால் நன்மையைக் கருதி நீர் நஃபிலான ஸதகாவை கொடுக்க விரும்பினால் கொடுக்கலாம்

என்று கூறினார்கள். இதைக் கேட்ட அந்த கிராமவாசி இறைவன் மீது ஆணையாக! நான் இந்த செயல்களுக்கு குறைவாகவோ, இதற்கு மேல் அதிகமாகவோ எதுவும் செய்யமாட்டேன் என்று கூறி அங்கிருந்து சென்று விட்டார். அங்கு அமர்ந்திருந்த மக்களிடம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், இந்த மனிதர் கூறுவது உண்மை என்றால் இவர் வெற்றி பெற்று விட்டார் என்று கூறினார்கள்.

ஆக ஒவ்வொரு மனிதனும் தத்தமது தகுதிக்கு ஏற்ப அமல் செய்கிறார். இது தொடர்பான ஒன்பதாவது விஷயம், திருககுர்ஆனின் எல்லா கட்டளைகளும் நிறைவேற்றத்தக்கதாகும். இதே கருத்து வேறு ரீதியில் இதற்கு முன்னும் வந்துள்ளது. மனிதனின் மீது சுமையாக எந்த ஒரு கட்டளையும் இல்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்மாதிரியின் படி செயல்படுவது தொடர்பாக, ஒரு உண்மையான மூஃமின் அதன்படி செயல்படுகிறார்; செயல்பட முயற்சி செய்கிறார் என்று ஏற்கனவே கூறினேன்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை, திருக்குர்ஆனின் கட்டளைகளின் செயல் வடிவமாகும் என்று கூறினார்கள். எனவே தத்தமது தகுதிக்கும், சக்திக்கும் ஏற்ப ஒவ்வொருவரும் இதன்படி செயல்பட கட்டளை உள்ளது. இறைவன் எந்த மூஃமின்களையும் தேவை இல்லாமல் கஷ்டப்படுத்துவதில்லை என்பது இறைவனின் வாதமாகும். எனவே, இறைவனின் கட்டளைகள் எல்லாம் எல்லாரும் அமல் செய்வதற்குரியவையே ஆகும்.

பிறகு இது தொடர்பான பத்தாவது விஷயம், இறைவன் ஒவ்வொருவருக்கும் உண்மையான கனவை காட்டுவதன் நோக்கம், மனிதன் நபிமார்களுக்கு வருகின்ற வஹி மற்றும் இல்ஹாம் ஆகியவை பற்றி ஓரளவு புரிந்துகொள்ள வேண்டும் என்பதாகும். உண்மையான கனவுகள் யாருக்குமே வரவில்லை என்றால் மனிதன் நபிமார்களின் வாதங்களை பொய் என்று தான் கருதுவான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நபி வருகின்றபோது அவருடைய நுபுவ்வத், வஹி, இல்ஹாம் ஆகியவற்றை புரிந்து கொள்ள அல்லாஹ் ஒவ்வொரு மனிதனிடத்திலும் ஒரு திறமையை வைத்துள்ளான். அந்த திறன் கனவு ஆகும். உண்மையான கனவு யாருக்குமே வரவில்லை என்றால், இல்ஹாம் வஹி இதுவும் மனிதனுக்கு வரும் என்று எப்படி ஏற்றுக் கொள்ள முடியும். லா யுகல்லிஃபுல்லாஹு நஃப்ஸன் இல்லா வுஸ்அஹா என்பது இறைவனின் பண்பாகும். எனவே இந்த திறமையை இறைவன் எல்லாரிடத்திலும் வைத்து விட்டான் என்று கூறுகிறார்கள்.

திருடனுக்கும், கொள்ளையடிப்பவனுக்கும், விபச்சாரிக்கும் கூட உண்மையான கனவுகள் வருகின்றன.

இது தொடர்பான பதினோராவது வி-யம், வாலிபப் பருவத்தை அடைவதற்கு முன்னுள்ள குழந்தைப் பருவம், அறியாமையின் பருவமாகும். இவ்வாறே மூளை வளர்ச்சி குன்றியவர்கள், மனரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் போன்றோர் இறை கட்டளையின்படி செயலாற்றாமல் இருப்பது அல்லது எதைப் பேணாமல் இருப்பதன் காரணமாக அவர்களுக்கு கேள்வி கணக்கு கிடையாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

மனிதனின் குழந்தைப் பருவம் அறியாமையின் பருவமாகும். அல்லாஹ் இதற்கு கேள்வி கணக்கு கேட்கமாட்டான். அல்லாஹ் கூறுகிறான்: லா யுகல்லிஃபுல்லாஹு நஃப்ஸன் இல்லா வுஸ்அஹா.

இது தொடர்பாக பன்னிரண்டாவது விஷயம், இளமைப் பருவம் முழு சுய நினைவு, அறிவு மற்றும் எல்லா திறமைகளும் ஆரோக்கியமாக இருக்கிற போது அல்லாஹ்வின் கட்டளைகளில் செயல்படவில்லை என்றால் இது கேள்வி கணக்கிற்கு உரியதாகும்.

**இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இளமைப்பருவம் என்ற ஒரே பருவத்தில் தான் மனிதன் வேலை செய்ய முடியும். ஏனென்றால் அப்போதுதான் சக்திகள் வளர்ந்திருக்கும் திறமைகள் வரும். இந்தப் பருவத்தில் தான் நஃப்ஸே அம்மாரா (தீமை செய்யத் தூண்டும் ஆன்மா) கூடவே இருக்கிறது. அது மனிதன் மீது பல வகையில் தாக்குதல்

தொடுக்கிறது. மனிதனை அது தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க முயல்கிறது. இதே பருவம் தான் கேள்வி கணக்கிற்குரிய பருவமாகும். முடிவை நன்மையாக ஆக்கும் நாட்களும் இதுவே ஆகும். ஆனால் கடுமையான முயற்சியும் உழைப்பும் இல்லா விட்டால் இதே பருவம் தான் மனிதனை நரகத்திற்கு கொண்டு சென்று விடுகிறது. நிராசை அடைய வைத்து விடுகிறது. ஆம்! முழு கவனத்தோடும், சிறப்பாகவும் இந்த பருவத்தை கழித்தால் இறைவனின் அருளால் முடிவு நன்றாக அமைந்திட இறைவனிடம் நம்பிக்கை வைக்கலாம். அல்லாஹ் எந்த உயிரின் மீதும் அதன் சக்திக்கு அப்பாற்பட்ட சுமையை சுமத்துவதில்லை. அல்லாஹ் இட்டிருக்கின்ற கட்டளை மற்றும் அவன் செய்யக்கூடாது என்று தடுத்தவை ஆகியவையின் அடிப்படையில் மனிதன் தனது வாழ்வை அமைத்துக் கொள்ள முயற்சி செய்யவில்லை என்றால், அல்லாஹ் தனது எல்லையில்லாத கருணை மற்றும் மன்னிப்பு பற்றி மனிதனுக்கு நற்செய்தி வழங்கியிருந்தும் அதிலிருந்து பலன்பெறவில்லை என்றால், மனிதன் தனது திறமை மற்றும் சக்தியை தீர்மானித்துக் கொண்டு இறை கட்டளைகளை செயல்படுத்துவதிலிருந்து முகம் திரும்பினால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று இந்தப் பருவம் மனிதனை நரகத்திற்கு கொண்டு சேர்த்து விடும்.

அல்லாஹ் **லா யுகல்லிஃபுல்லாஹு நஃப்ஸன் இல்லா வுஸ்அஹா** என்று கூறிய பிறகு **லஹா மா கஸபத் வஅலைஹா மக்தஸபத்** என்று கூறுகிறான். அதாவது மனிதன் செய்த நன்மை மனிதனுக்கே பலன் தருகிறது. அவன் செய்த தீமையும் அவன் மீது தண்டனையின் வடிவில் விழும். நன்மைக்காக இறைவன் கஸப் என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளான். நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் அது மிக எளிதில் செய்யலாம். ஆனால் மனிதன் தனது பேரிழப்பின் காரணமாக இயல்பின்படி செயல்படாமல் குறுக்கு வழியை கையாளுகிறான். இது மனிதனின் ஃபித்ரத் – இயல்பிற்கு முரணானதாகும். ஒழுக்க திறன்களை சரியான நேரத்தில் பயன்படுத்தாத காரணமாக அல்லாஹ்விற்கு பிடிக்காத வழியில் சென்று இதுவே எளிதான வழி என்று எண்ணிக் கொண்டு மனிதன் செய்கிறான். ஆனால் தீமைகளிலும் பாவங்களிலும், மனிதன் மூழ்கிக் கொண்டே செல்லும்போது தான் நான் மிகவும் கடினமான வழியில் செல்கிறேன் என்பதை உணர்கிறான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இங்கு ஒரு நுட்பமான விஷயத்தை விளக்குகிறார்கள். அதாவது விருப்பத்தின் சாயல் இருக்கின்ற தீமைக்குத்தான் தண்டனை கிடைக்கும். வேண்டுமென்றே விரும்பி செய்யப்பட்ட தீமைக்கு தண்டனை கிடைக்கும். எனவே அல்லாஹ் எந்த உயிரின் மீதும் அதன் சக்திக்கு அப்பாற்பட்ட கஷ்டத்தை சுமத்துவதில்லை. மனிதனை கஷ்டத்திற்கு ஆளாக்குகின்ற கட்டளையை இறக்குவதில்லை. மாறாக, **அஃப்வ்** – கண்டும் காணாமல் இருத்தல், பாவங்களை மன்னித்தல் ஆகிய பண்போடு அல்லாஹ் மனிதனிடம் நடந்து கொள்கிறான். ஆனால் பாவம் செய்வதில் மனிதனுக்கு தைரியமும் துணிச்சலும் ஏற்பட்டு அதை விடாமல் செய்து கொண்டே இருந்தால் அதற்குரிய தண்டனை உண்டு.

எனவே நமது கருணைமிகுந்த அன்பிற்குரிய இறைவன் இவ்வசனத்தின் அடுத்தப் பகுதியில் நமக்கு துஆவும் கற்றுத் தந்துள்ளான். எல்லா நிலையிலும் இயல்பிற்கு ஏற்றவாறு நல்ல செயல்களின் பக்கம் கவனம் இருக்க வேண்டும் என்பதற்காக மனித சக்திக்கு உட்பட்ட கட்டளைகளை பிறப்பித்துள்ளான்.

அல்லாஹ் கூறுகிறான்: எங்கள் இறைவா! நாங்கள் மறந்து விட்டாலோ, தவறிழைத்தாலோ நீ எங்களை தண்டிக்காதிருப்பாயாக. எங்கள் இறைவா! எங்களுக்கு முன்னுள்ளவர்கள் மீது நீ பாரத்தைச் சுமத்தியது போன்று எங்கள் மீதும் நீ அதனைச் சுமத்தாதிருப்பாயாக. எங்கள் இறைவா! எங்களால் (சுமக்க) இயலாத (பாரத்)தை எங்கள் மீது சுமத்தாதிருப்பாயாக. எங்கள் (குற்றங்களை) மன்னிப்பாயாக. எங்களைப் பொறுத்தருள்வாயாக. எங்கள் மீது கருணை காட்டுவாயாக. நீயே எங்கள் எஜமானன். ஆகவே நிராகரிக்கும் கூட்டத்தினர்க்கு எதிராக நீ எங்களுக்கு உதவி புரிவாயாக.

நஃப்ஸ் தூய்மைப்படுவதற்கு இந்த துஆக்கள் மிகவும் அவசியமாகும். நஃப்ஸ் தூய்மை அடைந்தால், லா யுகல்லிபுல்லாஹு நஃப்ஸன் இல்லா வுஸ்அஹா என்பதன் சரியான பொருளும் புரிய வரும். மனிதன் மிகவும் பணிவோடு இவ்வாறு துஆ செய்யும் போது எங்கள் இறைவா நாங்கள் மறதியாக நல்ல செயல்களை செய்யாததன் காரணமாக நீ எங்களை பிடித்து விடாதே. உனது பிடி இறங்கிய மக்களின் முடிவை எங்கள் மீது

இறக்காதிருப்பாயாக. நாங்கள் உனது கட்டளைகளை மீறுபவர்களாக எங்களை ஆக்கி விடாதே. அல்லது உனது கட்டளைகளை பொருட்படுத்தாதவர்களாக எங்களை ஆக்காதிருப்பாயாக. மறதியின் காரணமாகவும், மனித பலவீனத்தின் காரணமாகவும் உனது கட்டளைகளை செய்யாமல் இருப்பதால் எங்களை மன்னிப்பாயாக. எனவே நாங்கள் மறந்ததன் காரணமாக வழக்கமாகவும் வேண்டுமென்றே செய்யாமல் இருப்பவர்களோடு எங்களையும் சேர்க்காதிருப்பாயாக.

பிறகு ஒரு மூஃமின் மிகவும் பணிவோடு இறைவனிடம் எங்கள் இறைவா நாங்கள் வேண்டுமென்றே தவறிழைக்கவில்லை. மாறாக அறியாமையின் காரணமாக நாங்கள் தவறிழைத்து விட்டோம். எங்களிடம் வாங்கப்பட்ட உறுதிமொழி எங்கள் மீது சுமத்தப்பட்ட சுமை ஆகியவற்றை நிறைவேற்றும் நிலை முந்தைய சமுதாயத்தின் நிலையைப் போன்று ஆகிவிட வேண்டாம். மாறாக நாங்கள் எடுத்துக் கொண்ட உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு தவ்ஃபீக் வழங்குவாயாக. இல்லையென்றால் உனது பிடியின் கீழ் வந்த மக்களோடு நாங்களும் சேர்ந்து விடுவோம்.

இறைவன் நான் எந்தவொரு உயிரின் மீதும் தகுதிக்கு அப்பாற்பட்ட சுமையை சுமத்துவதில்லை என்று கூறியிருந்த போதிலும் உண்மையான மூஃமின், இறையச்சம் கொண்டவர்கள் அல்லாஹ்வின் முன் தங்களது பணிவை வெளிப்படுத்தியவாறு இறைவனின் இந்த கூற்றை சுட்டிக்காட்டி எனது செயலின் விளைவு என்னை தாங்க முடியாத சோதனைக்கு ஆளாக்கி விடக் கூடாது. எனவே எப்போதும் என்னை மன்னிப்பாயாக. உனது மன்னிப்பு என்ற போர்வையில் என்னை எப்போதும் போர்த்திக் கொள்வாயாக. நான் எப்போதும் உனது கருணையிலிருந்து பங்கு பெற்றுக் கொண்டிருக்க வேண்டும். இமாமை ஏற்றுக் கொள்கின்ற நற்பாக்கியம் எனக்கு கிடைத்துள்ளது. அதில் எப்போதும் என்னை நிலைத்திருக்கச் செய்வாயாக. எனது ஈமானை விரயம் செய்துவிட எனது எதிரிகளுக்கு வாய்ப்பு கிடைக்கக் கூடாது. எனது மார்க்கத்திற்கும், எனது ஜமாஅத்திற்கும் என் மூலம் எந்த இழப்பும் ஏற்பட்டு விடக் கூடாது என்று தொடர்ந்து துஆ செய்து வர வேண்டும்.

சில நேரம் ஒரு தனி மனிதர் செய்கின்ற தவறு ஜமாஅத்தை சோதனைக்கு ஆளாக்கி விடலாம். எனவே நாங்கள் என்று கூறி ஒட்டுமொத்த ஜமாஅத்திற்கும் துஆ செய்யுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. துஆவினுடைய மொத்த விளைவும் ஜமாஅத்தின் மீது இருக்க வேண்டும். இதனால் ஒவ்வொருவரும் தம்மை தாமே சீர்திருத்துவதற்கும், தமது பொறுப்பை புரிந்து கொண்டதன் பக்கமும் கவனம் ஏற்பட வேண்டும். ஜமாஅத் உறுதியான அஸ்திவாரத்தில் நிலைபெற்றவாறு எதிரியின் எல்லா தீமைகளிலிருந்தும் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

எல்லா கட்டளைகளின் படியும் நாம் முழு ஆற்றலுடனும் செயல்படுவதற்கு அல்லாஹ் நமக்கு தவ்ஃபீக் வழங்குவானாக. நிச்சயமாக அல்லாஹ் நமது ஆற்றல்களையும் சக்திகளையும் பார்த்து தான் கட்டளைகளை நமக்கு பிறப்பித்திருக்கின்றான். நான் ஒரே இடத்தில் தேங்கி விடாமல் எல்லா ரீதியிலும் இறைவன் நமது வளத்தை பெருக்குவானாக. ஒட்டுமொத்த ஜமாஅத்தின் பாதங்களும் குறிக்கோளை நோக்கி விரைவாக முன்னேற்றத்தை நோக்கி செல்லட்டுமாக. அல்லாஹ் நமது துஆவை ஏற்றுக் கொள்வானாக.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 29.05.2009

Translated by : Maulavi S. ABDUL QADIR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456